பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 04 திங்கட்கிழமை 19.12.2022 கதிர் 295

## மனைவியை மண்வெட்டிப் பிடியால் தாக்கிக் கொலை செய்த கணவன்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கருப்பிடமலை–நெவுண்டலியமடு வயல் பிரதேசத்தில் மது போதையில் மனைவியைக் கணவன் மண்வெட்டிப் பிடியால் அடித்துப் படுகொலை செய்துள்ளார்.

கரடியன்குளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரான 2

# தமிழின அழிப்புக்கு உடன் நீதி வேண்டும்

## கொலைகளை மறைக்கவா கொடுப்பனவு? முல்லைத்தீவில் உறவுகள் திரண்டு கோஷம்




முல்லைத்தீவு மாவட்ட செயலகத் துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்கள் இன்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

244 குடும்பங்களை விசாரணைக்காக முல் லைத்தீவு மாவட்ட செய லகத்துக்கு வருமாறு காணா மல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அழைப்பு விடுத்திருந்தது. 2



## வியட்நாமில் உயிர்மாய்த்த கிரியின் சடலம் சாவகச்சேரியில் நல்லடக்கம்

### உறவுகள் திரண்டு கதறல்

வியட்நாமில் உயிரை மாய்த் துக்கொண்ட யாழ். சாவகச் சேரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரனின் (வயது 37) சடலம் இன்று நல்லடக்கம் செய்யப் பட்டது.

இறுதி அஞ்சலி நிகழ்வில் உறவுகள் திரண்டு கதறிய முதனர்.

அண்மையில், கப்பல் மூல மாக கனடா செல்ல முற்பட்டி ருந்த நிலையில் வியட்நாம் கடற்பரப்பில் 300 இற்கும் மேற் பட்ட இலங்கையர்களுடன் 8

## முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கொழும்பில் சுட்டுக்கொலை



கொழும்பு புறநகர் பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டுள்ளார்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் மூன்று பிள்ளைகளின் தந் தையான மொஹமட் பருான் (வயது 48) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

அவர் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு 10.10 மணியள வில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் துப்பாக்கிச்சூடு 2

## ஆயிரக்கணக்கானோர் கண்ணீர்மல்க விடைபெற்றார் ஷாப்டர்


### இறுதி அஞ்சலி நிகழ்வில் ஜனாதிபதியும் பங்கேற்பு: கொலையாளிகள் எவரும் இதுவரை கைதாகவில்லை

கொழும்பில் கடத்தப் பட்டுப் படுகொலை செய் யப்பட்ட பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்ட ரின் இறுதிக்கிரியைகள் ஆயிரக்கணக்கானோரின் பங்கேற்புடன் நடை பெற்றது.

அவரது பூதவுடல், கொழும்பு மலர் வீதியில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, பின்னர் பொரளை பொதுமயானத்தில் நேற்று மாலை அடக்கம் செய் யப்பட்டது.

இறுதிக்கிரியைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உள்ளிட்ட முக்கி யஸ்தர்கள் பலர் பங்கேற் றனர்.

இதேவேளை, தினேஷ் ஷாப்டரின் கொலை தொடர்பில் அவரது 2



## மீட்கப்பட்ட 105 ரோகிங்கியர்களும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பில் தத்தளித்துக் காப்பாற்றப்பட்ட 105 ரோகிங்கியர்களும் மருத் துவ பரிசோதனைகளின் பின் னர் காங்கேசன்துறை கடற்படை முகாமில் 14 நாள்கள் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற் றிரவு சட்ட வைத்திய அதிகாரி யின் பரிசோதனைக்கு உட் படுத்தப்பட்டனர். இதன்போது அனைவருக்கும் தோல் ஒவ் வாமை நோய் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் களுக்குச் சிகிச்சையளிக்கும் நோக்கில் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

இதேநேரம் குறித்த படகில் 104 பேர் பயணித்தனர் என்று ஏற்கனவே செய்திகள் வெளி வந்தபோதும் இவர்கள் 2

## 2 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

நாட்டில் நிலவும் சீரற்ற கால– நிலை காரணமாக இரண்டு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இதன்படி, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்கு நாளை நண்பகல் 12 மணி வரை மண்சரிவு அபாய எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாகவும் 2

## மாணவர்களை இலக்குவைத்து கஞ்சா கலந்த மாவா விற்பனை

### யாழில் ஒருவர் கைது



பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து கஞ்சா கலந்த மாவா போதைப் பாக்கை விற்பனை செய்து வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார் 2

## கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகர பிதா விலகல்

### செயலாளரிடம் இராஜினாமாக் கடிதம் கையளிப்பு



தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் தலைவர் யோ. இருதயராஜா தனது பதவியை இன்று காலை இராஜினாமா செய்துள்ளார்.

பருத்தித்துறை நகர சபை யின் 2023ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு – செலவுத் திட்டம் இன்று சபையில் சமர்ப் பிக்கப்பட்டு விவாதங்கள் இடம்பெற இருந்தன. அதற் காகச் சபை காலை 9:30 ம ணிக்குக் கூடவிருந்தது.

இந்நிலையில், காலை 9:20 மணிக்கு வருகை தந்த நகர சபைத் தலைவர் யோ. இருதயராஜா, சபையின் 2

## வவுனியாவில் நீரில் நஞ்சு கலந்து 15 மாடுகளைச் சாகடித்த கொடூரம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, பூம்புகார் – கல்மடுப் பகுதியில் மாடுகள் அருந்தும் நீரில் நஞ்சு கலக்கப்பட்டமையால் 15 மாடுகள் பரிதாபமாக சாவ டைந்துள்ளதுடன், பல மாடுகள் உயிருக்குப் போராடி வரு கின்றன.

மாடுகள் நேற்று மாலை நீர் அருந்துவதற்காக சென் றுள்ளன. அவை நீர் அருந்தி சிறிது நேரத்தில் படபடவென சரிந்து வீழ்ந்து உயிரிழந் துள்ளன. சுமார் 15 மாடுகள் இவ்வாறு அதேயிடத்தில் உயி ரிழந்துள்ளன. மேலும் சில மாடு கள் உயிருக்குப் போராடி வரு வதுடன் சில மாடுகள் காணாமல் போயுமுள்ளன. 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இறுதி அஞ்சலி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனப் பணியாளர்கள், சாரதி, பொரளை பொதுமயான சேவையாளர்கள் உள்ளிட்ட 30 இற்கும் அதிகமானோரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தினேஷ் ஷாப்டரின் கார் பயணித்த பகுதிகளில் உள்ள 42 சி.சி.ரி.வி. கமராக்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

தினேஷ் ஷாப்டர் கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக அவரது தொலைபேசிக்கு அழைப்பை மேற்கொண்ட நபர் மற்றும் கிரிக்கெட் வர்ணணையாளரான பிரைன் தோமஸ் ஆகியோரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி மாலை பொரளை பொது மயானத்துக்கு அருகில் கைகளும், கால்களும் கட்டப்பட்டுப் பலத்த காயங்களுடன் காரில் இருந்த நிலையில் மீட்கப்பட்ட தினேஷ் ஷாப்டர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அன்றிரவு உயிரிழந்தார்.

## மாணவர்களை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 3.5 கிலோகிராம் எடையுடைய கஞ்சா கலந்த மாவா போதைப் பாக்கு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நபர் நீண்ட காலமாக மாணவர்களை இலக்கு வைத்துப் போதைப் பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டநபர்யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## முஸ்லிம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் ஹோட்டலின் கதவைத் தட்டி முதலில் சிகரெட் கேட்டுள்ளார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மற்றைய நபர் திடீரென கதவைத் திறந்து ஹோட்டலுக்குள் நுழைந்து உரிமையாளரின் மார்பில் நான்கு தடவைகள் துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த ஹோட்டலின் உரிமையாளர் பாதுக்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

ஹங்வெல்ல பொலிஸ் நிலையத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## வவுனியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பாக மாடுகளின் உரிமையாளர் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாடுகள் அருந்திய நீரில் விசம் கலந்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார்.

## கூட்டமைப்பின் ......

செயலாளரிடம் தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துவிட்டு வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து 9:35 மணியளவில் சபையைக் கூட்டிய பருத்தித்துறை நகர சபை செயலாளர், தலைவர் பதவி விலகியதைச் சபைக்கு அறிவித்ததுடன் அவர் பதவி விலகியது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரித்து புதிய தவிசாளர் தெரிவாகும் வரை சபை நடவடிக்கை இடம்பெறாது எனவும் தெரிவித்தார்.

திருத்திய வரவு – செலவுத் திட்டத்தை ஆளும் தரப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்ட சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் ஒன்று சேர்ந்து மீண்டும் தோற்கடிக்கவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், தான் இன்று சபை அமர்வுக்கு முன்பதாகவே தலைவர் பதவியில் இருந்து விலகியுள் ளார் என்று இருதயராஜா அறிவித்துள்ளார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் கடந்த 5ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர், தமிழ்த் தேசியமக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 பேர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துத் தோற்கடித்திருந்தனர். அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 4 பேர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர், சுயேச்சைக் குழு உறுப்பினர் ஒருவர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் என 7 பேர் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இதையடுத்து இன்று திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு – செலவுத் திட்டத்தையும் சபை உறுப்பினர்கள் பலர் தோற்கடிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று வெளியான தகவலையடுத்து நகர சபைத் தலைவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இரண்டாம் தடவையும் வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தலைவர் பதவி வறிதாகும். அந்நிலையில், தோற்கடிக்கப்பட்டு தலைவர் பதவியை இழக்காது இருப்பதற்காகத் தலைவர் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார் என்று சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## மீட்கப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணித்த படகை எடுத்து வரும் முயற்சியில் கடற்படையினருடன் பணியில் இருந்த ரோகிங்கியர் நேற்று மாலையே கரை திரும்பியதால் அவரது எண்ணிக்கை தவறவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மனைவியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயக்குமார் புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் கொலையாளியான 35 வயதுடைய வல்லிபுரம் ஜெயக்குமார் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கரடியனாறுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 2 மாவட்டங்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானத்துடனும் இருக்க வேண்டும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தமிழின ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விசாரணைக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும், கொலைகளை மறைக்கவா கொடுப்பனவு?, சர்வதேச விசாரணையையே நாம் கோருகின்றோம் உள்ளிட்ட பல கோஷங்களை அவர்கள் எழுப்பினர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நடக்கட்டும் தேர்தல்

பேசிப் பேசிக் குழப்பத்தில் ஆழ்த்துவது அரசியல்வாதிகளின் பரவணிப் பண்பியல்பு. அதிலிருந்து அவர்கள் மாறவே மாட்டார்கள் போலும்.

இப்போதும் கூட, பொருத்தமற்ற – தொடர்பற்ற – இரண்டு விடயங்களைத் தொடர்புபடுத்தி, போட்டடித்துக் குழப்பி, நாட்டையும் மக்களையும் கூட குழப்பும் கைங்கரியத்தில் ஈடுபட்டு இருக்கின்றார்கள் அவர்கள்.

“இப்போதைய நெருக்கடிக்குத் தேர்தல் தீர்வைத் தேடித் தராது. தீர்வுக்குக் கட்டமைப்பு ரீதியான பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று உபதேசித்திருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

அது சரி. உண்மையான கூற்று. ஆனால் இந்த இரண்டு விடயத்தையும் போட்டுக் குழப்பி அடிப்பது ஏன் என்பதுதான் கேள்வி.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான கட்டமைப்பு மாற்றத்தை யார் செய்வது என்பதுதான் இப்போதுள்ள சர்ச்சை.

மக்களால் 69 லட்சம் வாக்குகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியே நாட்டு நிர்வாகத்தைப் போட்டடித்து விட்டுத் தப்பிச் சென்று விட்டார். அவருக்குப் பக்கபலமாக – அவருக்கு உதவியாக – மக்கள் தேர்ந்தெடுத்து கொடுத்த மக்கள் பிரதிநிதிகள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். நம்பிக்கையை இழந்த அந்த மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்த ஜனாதிபதிதான் இப்போது பதவியில் இருக்கிறார். அவர் மக்கள் தேர்வு செய்த நேரடிப் பிரதிநிதி அல்லர்.

ஆகவே நாட்டுக்கு தேவையான கட்டமைப்பு மாற்றத்தை செய்யக்கூடியவர்கள் யார் என்பதை மக்கள் தேர்ந்தெடுப்பதில் என்ன தவறு இருக்க முடியும்? அதுதானே சரியான நடைமுறையாகவும் இருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுத்த மக்கள், அவரின் கோரிக்கையின் பேரில் அவருக்காக தேர்ந்தெடுத்த நாடாளுமன்றமே இப்போது பதவியில் – அதிகாரத்தில் – உள்ளது.

ஆகவே சரியான மக்கள் பிரதிநிதிகளிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைப்பது, நாட்டைச் சீரமைப்பதற்கான ஒழுங்கான பின்புலத்தை ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடிக்கு தேர்தல் தீர்வு அல்ல. அதற்காக தார்மீக ரீதியில் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அரசுக்கு வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கு அதனைக் காரணமாக முன்வைக்கவும் தேவையில்லை.

இருந்த ஜனாதிபதியும், அவருக்காக அவரது முழு பிரசன்னம் மற்றும் பிரசாரத்தின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றமும் இப்போது மக்கள் அங்கீகாரத்தை இழந்துவிட்ட தரப்புக்கள் என்பது கண்கூடு.

பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, கட்டாயம் நடத்தப்பட வேண்டுமென்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கும் தேர்தலையும் தள்ளி வைக்க தேவையில்லை.

உண்மையான மக்கள் பிரதிநிதிகளை அதிகாரத்தில் நிறுத்தத் தேர்தல் தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.



## தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை சனிக்கிழமை கூடி ஆராய்வு!

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை கூட்டம் கடந்த சனிக்கிழமை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுநாணயக்கார தலைமையில் கூடியது.

ஆலோசனை சபை கூட்டத்தில் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர், தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள், முதலாளிமார்களின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாட்டின் தொழில்துறை அபிவிருத்தி தொடர்பாக பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் ஆலோசனை சபையின் உறுப்பினருமான பாரத் அருள்சாமி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பான யோசனையை முன்வைத்தார்.

இதன்போது முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இதன்போது கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி நீதிமன்றத்தின் பிரகாரம் தொழிலாளர்களுக்கு சார்பாக சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்தை முன்கொண்டு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் பெருந்தோட்ட கம்பெனிகள் தான்தோன்றித்தனான செயற்பாடுகளின் மூலமாக தொழிலாளர் களின் உழைப்பை பறிப்பது மாத்திரமன்றி அவர்களின் உரிமையையும் நசுக்குகின்றன. பல்வேறுப்பட்ட தொழில் பிணக்குகள் முதலாளிமார் சமேளனத்தால் தொடுக்கப்பட்ட வழக்கைக் காரணம் காட்டி தட்டிக் கழிக்கப்பட்டு வருகின்றன.

தேயிலைத் தொழில்துறையின் வளர்ச்சி அதிகரித்துள்ள நிலையில் தொழிலாளர்களின் வேதனம் அதே நிலையிலேயே உள்ளது. டொலர் வீக்கத்தின் பயனை கம்பெனிகள் பெற்ற போதிலும் அதில் எந்தவிதமான நன்மையும் தொழிலாளர்கள் பெறவும் இல்லை. மாறாக, அவர்களின் உழைப்பே சுரண்டப்படுகின்றது. எமது நாட்டுக்கு அந்நிய செலவாணி அவசியம்தான். ஆனால் அது எமது அப்பாவி தொழிலாளர்களின் உயிர்களில் அடையக் கூடாது என்பதை வலியுறுத்தினார்.

இதன் பண்பு தொழிலில் சங்கங்களுக்கும் முதலாளிமார் சமையலறத்திற்கும் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக தொழிலாளர் அமைச்சர் தொழிற்சங்கங்களையும் முதலாளிமார் சமேளனத்தயும் தனித்தனியே சந்தித்து தொழிலாளர்களின் உரிமையை பாதுகாக்கவும் அவர்களுக்கு சரியான ஓர் ஊதிய முறையும் அறிமுகப்படுத்தவும் கூட்டு ஒப்பந்தத்தை மீண்டும் கொண்டு வரவும் தான் முடிவெடுக்க உள்ளார் என உறுதி வழங்கினார்.

இதன் போது வரி அதிகரிப்பின் விளைவுகளும் தீர்க்கமாக கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் தற்போது 9 ஆயிரத்து 800 கம்பெனிகளும் 3 லட்சத்து 80 ஆயிரம் தொழில் முனைவோருமே வற் வரியை செலுத்துவதாக அமைச்சர் கூறினார். அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு வரி அதிகரிப்பு அவசியம் என்பதைக் கூறியவர் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொழிற்சங்கங்களுடன் தொழில் வழங்குநர்களிடமும் பல திட்டங்களை முன்னெடுக்க உள்ளார் எனவும் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் தொழில் சட்டத்தை தனி ஓர் அலகாக மாற்றுவது தொடர்பில் தொழிற்சங்கங்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தன. கடந்த காலங்களில் இந்த முயற்சியின் மூலமாக தொழிலாளர்களின் பல நலன்புரி விடயங்கள் பாதிக்கப்பட இருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களைப் பாதிக்கும் எந்தத் திட்டத்துக்கும் தொழிற்சங்கங்கள் ஆதரவு வழங்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்தன.

இதற்கு பதிலளித்த அமைச்சர், நாட்டுக்கு முதலீடுக்கு வரும் முதலீடாளர்களுக்கும் நாட்டில் பணிபுரிய உள்ள தொழிலாளர்களுக்கும் இலகுவான முறையில் சட்டத்தை அறிந்து கொள்ளவும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைமையை உருவாக்க தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## சமத்துவக் கட்சியின் அமைப்புக்களுக்கான ஒருங்கிணைப்பும் அரசியல் பாட கருத்தமர்வு!





சமத்துவக் கட்சியின் அமைப்பாளர்களுக்கான அமைப்புக்களுக்கான ஒருங்கிணைப்பும், அரசியல் பாடங்களும் கருதரங்கும் சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது. கட்சியின் தலைவர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் மூத்த நிர்வாக சேவை அதிகாரி செல்வின் இரனியஸ், முன்னாள் விரிவுரையாளரும், அரசியல் சமூக ஆய்வாளருமான சிராஜ், வல்லமை பெண்கள் அமைப்பின் இயக்குநர் ரஜனி இராஜேஸ்வரி, அதிபர் தவநாயகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தாய்லாந்துப் போர்க் கப்பல் 106 வீரர்களுடன் மூழ்கியது!

## 75பேர் மீட்பு, 35பேர் மாயம்







பாங்காக், டிச.19

தாய்லாந்து நாட்டின் கடற்படைக்கு சொந்தமான போர் கப்பல் நேற்று நள்ளிரவு தாய்லாந்து வளைகுடா பகுதியில் உள்ள கடற்பகுதியில் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. அந்த போர் கப்பலில் கடற்படை வீரர்கள் உள்பட 106 பேர் பயணித்தனர்.

அப்போது, கடலில் திடீரென புயல் காற்று வீசியதுடன், கடல் சீற்றமும் ஏற்பட்டது. இதனால், போர் கப்பலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மேலும், கப்பலுக்குள் கடல் நீர் புகுந்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் கப்பலில் புகுந்த கடல்நீரை வெளியேற்ற முடியவில்லை.

கடல் நீர் அதிகளவில் புகுந்ததால் நடுக்கடலில் கப்பல் மூழ்கத்தொடங்கியது.

போர் கப்பலில் இருந்த வீரர்கள் உள்பட அனைவரும் கடலுக்குள் விழுந்தனர். இது குறித்து தகவலறிந்த கடற்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

இந்த மீட்புப்பணியின் போது போர் கப்பலில் இருந்த 75 பேர் மீட்கப்பட்டனர்.

ஆனாலும், கடலில் மூழ்கியமையால் 31 வீரர்கள் மாயமாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதையடுத்து, மாயமான வீரர்களை தேடும் பணியை மீட்புக்குழுவினர் துரிதப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.



## அரசுக்கெதிரான போராட்டத்துக்கு ஆதரவு; ஈரானின் பிரபல நடிகை தாரனேயும் கைது!

டெஹ்ரான், டிச.19

ஈரானில் ஹிஜாப் விவகாரத்தில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 18 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்த நிலையில், அவர்கள் மீதுப்விசாரணை நடத்தப்பட்டு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் போராட்டத்தின் போது பாதுகாப்பு படை வீரர்களைக் கத்தியால் குத்தினர் எனஜ் குற்றம் சாட்டப்பட்ட 2 பேருக்கு சமீபத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இது சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் ஈரானை சேர்ந்த புகழ்பெற்ற நடிகை தாரனே அலிதூஸ்டி போராட்டக்காரர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்தும், அரசுக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்தும் கடந்த வாரம் இன்ஸ்டாகிராமில்ப்பதிவு ஒன்றை வெளியிட்டார். அந்த பதிவில் அவர் ஈரானின் மரண தண்டனைக்கு எதிராகப் பேசும்படி சர்வதேச அமைப்புகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதன் காரணமாக, போராட்டம் குறித்து பொய்யான தகவல்களை பரப்பினார் எனக் குற்றம்சாட்டி நடிகை தாரனே அலிதூஸ்டியை ஈரான் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். 38 வயதான தாரனே அலிதூஸ்டி ஈரானின் வெற்றிகரமான நடிகைகளில் ஒருவர் என்பதும், இவர் நடித்த 'தி சேல்ஸ்மேன்' திரைப்படம் கடந்த 2016 ஆம் ஆண்டு சிறந்த சர்வதேச திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதை வென்ற பின்னர் இவர் உலகளவில் பிரபலமானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் பொலிஸ் நிலையம் மீது பயங்கரவாதத் தாக்குதல்; நால்வர் பலி



இஸ்லாமாபாத், டிச.19

பாகிஸ்தானில்உள்ளகைபர்பக்ட்டுங்க்வா மாகாணத்தின் தெற்கு வாரிஸ்தான் மாவட்டதில் லாகி மர்வத் என்ற பகுதியில், காவல் நிலையத்தின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்ததாக்குதலில்கையெறிவெடிகுண்டுகள், ராக்கெட் லோஞ்சர்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தாக்குதல் நடத்திய நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இந்தத் தாக்குதலில் 4 பொலிஸார் உயிரிழந்தனர் எனவும், மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரீப் அல்வி இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் பயங்கரவாதத்தை முற்றிலுமாக அழித்தொழிப்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோலாலம்பூர் நிலச்சரிவில் பலி எண்ணிக்கை 24ஆக உயர்வு; ஒன்பது பேரைக் காணவில்லை




கோலாலம்பூர், டிச.19

மலேசியாவின்தலைநகர்கோலாலம்பூரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது படாங் காளி என்கிற நகரத்தில் பல ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய இயற்கைவிவசாய பண்ணை உள்ளது.

இந்த விவசாய பண்ணை உள்ளூர் சுற்றுலா பயணிகளுக்கான பிரபலமான பொழுதுபோக்கு தளமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை அங்கு திடீரென பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. 30 மீற்றர் உயரத்தில் இருந்து மண் சரிந்து விழுந்ததில், சுமார் ஒரு ஏக்கர் நிலம் மண்ணால் மூடப்பட்டது. இந்த நிலச்சரிவில் அங்கிருந்த சுற்றுலா பயணிகளின் குடில்கள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. இதில் குடில்களில் இருந்த பலர் உயிரோடு மண்ணில் புதைந்தனர்.

இது குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸார், தீயணைப்பு வீரர்கள் மற்றும்பேரிடர் மீட்பு குழுவினர் என சுமார் 400 பேர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கி தற்போது வரை 24 பேரின் உடல்கள்ப்மீட்கப்பட்டுள்ளன. மேலும் 9 பேர் மாயமாகியுள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை. இதனால் பலி இன்னும் அதிகரிக்கக்கூடும் என்கிற அச்சம் நிலவுகிறது. எனினும் மாயமானவர்களை தேடும் பணியில் மீட்பு குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘திருமதி உலக அழகி’ போட்டியில் இந்தியப் பெண் வெற்றி பெற்றார்!




லாஸ்வேகாஸ், டிச.19

திருமணம் முடிந்த பெண்களுக்கான உலக அழகி போட்டி 1984 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகிறது. முதலில், இந்த போட்டியானது திருமதி உலகின் அழகிய பெண் என்ற பெயரில் அழைக்கப்பட்டு, பின்னர் திருமதி உலக அழகி என 1988 ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இதுவரை 80 க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளன. பெரும அளவில் அமெரிக்காவே அதிக வெற்றிகளை தட்டி சென்றுள்ளது. 2001 ஆம் ஆண்டில் இந்தியாவை சேர்ந்த டாக்டர் அதிதி கோவித்ரிகர் என்பவர் முடி சூடினார்.

அவர் தற்போது 2022-2023 ஆம் ஆண்டுக்கான திருமதி இந்திய அழகிக்கான நடுவராகப் பணியாற்றி உள்ளார்.


இந்நிலையில், அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் நேற்று நடந்த திருமதி உலக அழகிப் போட்டியின் இறுதி சுற்று வரை இந்தியா முன்னேறி இருந்தது.

இதனால், முடிவு அறிவிக்கப்படும் வரை பரபரப்பு காணப்பட்டது. இறுதியில் இந்தியாவை சேர்ந்த சர்கம் கவுசல், திருமதி உலக அழகி பட்டம் வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்து உள்ளார்.

ஜம்மு மற்றும் காஷ்மீரை சேர்ந்த சர்கம், ஆங்கில இலக்கியத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்துள்ளார். விசாகப்பட்டினத்தில் ஆசிரியையாக பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

இவரது கணவர் இந்திய கடற்படையில் பணியாற்றி வருகிறார். இந்தத் தகவலை சமூக ஊடகத்தில் வெளியிட்டு உள்ள திருமதி இந்தியா மேலாண் அமைப்பு, நீண்டகால காத்திருப்பு முடிவுக்கு வந்துள்ளதுடன் 21 ஆண்டுகளுக்கு பின்பு கிரீடம் திரும்ப கிடைத்து உள்ளது என தெரிவித்து உள்ளது. இதேபோன்று, புதிதாக கிரீடம் சூடிய சர்கம் வெளியிட்ட செய்தியில், 21 ஆண்டுகளுக்குப் பின்னர் கிரீடம் நமக்கு கிடைத்து உள்ளது. அதிக மகிழ்ச்சியாய் இருக்கிறேன். இந்தியாவை மற்றும் உலகை நேசிக்கிறேன் என அவர் தெரிவித்து உள்ளார்.

## 16 வயதுச் சிறுமியின் மீது 12 மணி நேரம் எண்மர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை!




மும்பை, டிச.19

மராட்டிய மாநிலம் பல்கர் மாவட்டத்தை சேர்ந்த 16 வயது சிறுமி 8 பேர் கொண்ட கும்பலால் 12 மணி நேரம் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள அறிக்கைகளின் அடிப்படையில் தெரிய வருவதாவது:-

மராட்டிய மாநிலம் பல்கர் மாவட்டத்தை சேர்ந்த 16 வயது சிறுமிக்கு ஓர் இளைஞனுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த இளைஞன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கடற்கரை அருகே உள்ள மஹிம் என்ற கிராமத்திற்கு அழைத்து சென்றுள்ளான்.

அங்கு, ஆள்நடமாட்டமற்ற பங்களாவுக்கு சிறுமியை அழைத்து சென்றுள்ளான். அங்கு சிறுமியை அந்த இளைஞன் பாலியல் வன்கொடுமை செய்துள்ளான். பின்னர், அங்கு வந்த இளைஞனின் கூட்டாளிகள் 7 பேரும் சிறுமியைக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். பங்களாவில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த 8 பேரும் பின்னர் சிறுமியை கடற்கரை அருகே உள்ள வனப்பகுதிக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அங்கு வைத்தும் சிறுமியை 8 பேரும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு தொடங்கி சனிக்கிழமை காலை 10 மணி வரை கூட்டு பாலியல் வன்கொடுமை 12 மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்துள்ளது.

இதனையடுத்து, தனக்கு நடந்த கொடூரம் குறித்து சிறுமி பொலிஸில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த பொலிஸார் சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த 8 பேரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளமையுடன், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் அயர்லாந்தின் பிரதமராகத் தெரிவு!

டுப்ளின், டிச.19

அயர்லாந்து நாட்டின் பிரதமராக கடந்த 2017 முதல் 2020 வரை பதவி வகித்தவர் இந்திய வம்சாவளியை சேர்ந்த லியோ வரத்கர். 38 வயதில் பிரதமர் ஆனது மூலம் அயர்லாந்தின் இளம் பிரதமர் என்கிற பெருமையை பெற்றார். கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் லியோ வரத்கர் தலைமையிலான பைன் கேல் கட்சி பியனாப்பெயில் மற்றும் பசுமை கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை அமைத்தது. அதில் லியோ வரத்கர் துணைப் பிரதமராகவும், தொழில், வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராகவும் பணியாற்றினார்.

முன்னதாக கூட்டணி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக செய்து கொண்டஒப்பந்தத்தில் 2022 டிசம்பர் வரை பியானா பெயில் கட்சியின் தலைவர் மைக்கேல் மார்ட்டின் பிரதமராகவும், அதன் பிறகு அரசின் எஞ்சிய பதவிக்காலம் முழுவதும் லியோ வரத்கர் பிரதமராக இருப்பார் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி லியோ வரத்கரை புதிய பிரதமராக தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நடந்தது.

இதில் 87 உறுப்பினர்கள் லியோ வரத்கர் பிரதமராவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். 62 பேர் எதிராக வாக்களித்தனர். இதன் மூலம் லியோ வரத்கர் மீண்டும் அயர்லாந்து பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## இந்தியா முழுவதும் ‘நல்லாட்சி வாரம்’ இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பம்



புதுடெல்லி, டிச.19

இந்தியா முழுவதும் இன்று முதல் 25ஆம் திகதி வரைநல்லாட்சி வாரமாக கடைப்பிடிக்க மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மாவட்டங்கள், தாலுகா அளவில் இது தொடர்பான முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சிகளில், 700 க்கும் மேற்பட்ட மாவட்ட கலெக்டர்கள் கலந்து கொள்கிறார்கள். உயர் அதிகாரிகள் தாலுகா தோறும் சென்று குறைதீர்ப்பு முகாம்களை பார்வையிடுகிறார்கள். டெல்லி விஞ்ஞான் பவனில் இன்று நடக்கும் நிகழ்ச்சியில், மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங், இந்த வாரத்தைத் தொடங்கிவைக்கிறார்.

மத்திய அரசின் குறைதீர்ப்பு இணையதளத்தில் 81 லட்சத்து 27 ஆயிரம் கோரிக்கை மனுக்களும், மாநில அரசுகளின் குறைதீர்ப்பு இணையதளங்களில் 19 லட்சத்து 48 ஆயிரம் கோரிக்கை மனுக்களும் கிடைத்துள்ளன. நல்லாட்சி வாரத்தின்போது, இருதரப்பு இணையதளங்களும் இணைந்து செயல்பட்டு, மக்களின் கோரிக்கைகளை தீர்த்து வைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதும் மாவட்ட கலெக்டர்கள் 3 ஆயிரத்து 120 புதிய சேவைகளை அடையாளம் கண்டுள்ளனர். அந்த சேவைகள், ஒன்லைன் சேவையில் சேர்க்கப்பட உள்ளன என மத்திய பணியாளர் நலத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும் செயலமர்வும்









(கே.எ.ஹமீட்)

போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனியும் அறபா வித்தியாலய மாணவர்களுக்கான கருத்தரங்கும் நேற்று முன்தினம் சனியன்று அட்டாளைச்சேனையில் பெருவாரியானோரின் பங்களிப்புடன் இடம்பெற்றன.

'நாம் ஊடகர் பேரவை'யின் (we Journalists forum) ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளுக்கு அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் வை.எம்.எம்.ஏ. அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையினர் அனுசரணை வழங்கினர்.

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமான போதைப் பொருளுக்கு எதிரான நடை பவனி, சந்தைச் சதுக்கத்தைச் சென்றடைந்து, மீண்டும் அறபா வித்தியாலயத்தை வந்தடைந்தது. அதனையடுத்து அறபா வித்தியாலயத்தில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களுக் கான இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றஸாட் வளவாளராக பங்கேற்றார். 'நாம் ஊடகர் பேர வை'யின் தலைவர் யூ.எல். மப்றூக் தலைமையில் இந் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்சில், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

மேலும், வை.எம்.எம்.ஏ அமைப்பின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் எம்.ஐ.எம். றியாஸ், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் உப தலைவர் எஸ். தஸ்தகீர், செயற்திட்ட தவிசாளர் கே.எல். சுபையிர், அந்த அமைப்பின் அட்டாளைச்சேனை கிளையின் தலைவர் எம்.ஐ. ஹாசிம், செயலாளர் ஏ.எல். கியாஸ்தீன், அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ. அன்சார், நாம் ஊடகர் பேர வையின் செயலாளர் ஏ.சி. றிசாட், பொருளாளர் ஏ. புஹாது, உப தலைவர் ஏ.பி. அப்துல் கபூர், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.ஏ. வாஹிட், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# போதைப் பொருள் சீரழிவு குறித்து ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு






(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு மற்றும் குடும்ப நீதியில் பெண்கள், சிறார்கள் மத்தியில் தாக்கம் குறித்து டயக்கோனியா சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் அனுசரணையில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள இளம் ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் செயலமர்வின் இரண்டாவது செயலமர்வு கல்முனையில் ஞாயிறு இடம்பெற்றது.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலா இணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ், உளவளத் துணை உத்தியோகத்தர் ஏ.பி.அப்துல் சுக்கூர் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரதேச செயலகங்களின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எல்.எப்.சிபாயா, பி. ஜெனித்தா, பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எஸ்.எம்.ஏ.நஜீப், எஸ்.நிஸாந்தினி மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அலுவலக கணக்காளர் ஆர்.அனுஷ்கா மற்றும் இளம் ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் கடந்த செயலமர்வில் ஊடகங்களுக்கு அறிக்கையிடுதல் தொடர்பாக விடுக்கப்பட்ட அறிவித்தலை செயற்படுத்திய மருதமுனை எம்.ஐ. ஹைறுன்னிஸா, மாளிகைக்காடு நூருல் ஹுதா உமர், சம்மாந்துறை எம்.எம். இம்ரான், நற்பிட்டிமுனை பாத்திமா ஜெஸ்னி ஆகிய நான்கு பேர் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டு அவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வின் இறுதியில் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட இளம் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை ஒலுவில் பிரதேசத்தில் போதைப்பொருள் முகவர் கைது!

## பல்கலை மாணவருக்கு விநியோகிப்பவராம்

(கனகராசா சரவணன்)

அம்பாறை ஒலுவில் பிரதேசத்தில் பல்கலைக்களக மாணவர்களுக்குப் போதை பொருள் விநியோகித்து வந்த வியாபாரியின் வீட்டை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலையில் முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து கஞ்சாதூள் மற்றும் மாவா என்ற போதை பொருள் பெருமளவில் மீட்டமையுடன் 41 வயதுடைய போதை பொருள் வியாபாரியையும் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எம். பண்டாரவிஜயதுங்காவின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப்இன்பெஸ்டர் பகீரதன் தலைமையிலான குழுவினர் நேற்று மாலை 5 மணிக்கு ஒலுவிலில் பிரதேசத்திலுள்ள போதைபொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன் போது அங்கு வியாபாத்தில் ஈடுபட்டிருந்த 41 வயதுடைய வியாபாரியைக் கைது செய்தமையுடன் கஞ்சா மற்றும் புகையிலை கலந்து 300 கிராம் தூள், மாவா என்றழைக்கப்படும் ஒன்றரைக் கிலோ போதைபொருள் மற்றும் கஞ்சாவைப் புகைப்பதற்காக பயன்படுத்தப்படும் ஒ.சி.பி. என்ற பொருள் 30 பெட்டி என்பவற்றை மீட்டுள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்ட வியாபாரி இந்த போதை பொருளை நீண்ட காலமாக அந்த பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




# மாணவி மீது துஷ்பிரயோகம் இரண்டு மாணவர்கள் கைது

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பில் பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவிக்கு போதைப்பொருளை வழங்கி, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மாணவியின் காதலன் என குறிப்பிடும் ஒருவரும், அவரின் நண்பருமே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வடக்கு, கிழக்கில் இந்து ஆலயங்கள் இடித்தழிப்பு காணி அபகரிப்புக்களை நிறுத்தினால் தான் பேச்சு!

## சொல்லுந்தைரியமற்ற தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களை மடையர்கள் ஆக்கின்றனரா?

### வீ. ஆனந்தசங்கரி காட்டத்துடன் கேள்வி



(கனகராசா சரவணன்)

வடக்கு கிழக்கில் தமிழர் பகுதியில்; அரசாங்கம் இந்து ஆலையங்கள் இடிப்பு, காணிகள் அபகரிப்புக்களை நிறத்தினால் தான் பேச்சுக்கு நாங்கள் வருவோம் என சொல்லத் தைரியம் இல்லாத தமிழ் தலைமைகள் 70 வருட காலமாகத் தீர்க்க முடியாத அரசியல் பிரச்சினையை ஒன்றரை மாதத்தில் ஜனாதிபதி தீர்ப்பார் என நம்பி சென்று தமிழ் மக்களை மடையனாக்கின்றனரா? என தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அண்மையல் ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டை கூட்டினார். அதற்கு தமிழர் விடுதலை கூட்டணிக்கு அழைப்பு இல்லை. இருந்தபோதும் கட்சி தலைவர்கள் இல்லாதவர்களைக் கூப்பிட்டுள்ளார். நான் கட்சி தலைவர் இல்லையா? ஏன் என்றால் ரணிலுக்கு தெரியும் சங்கரி வந்தால் பிரச்சினை என்று.

இருந்தபோதும், கடந்த 2005 ஆம் ஆண்டு வரலாற்றில் காணாத சிங்கள தலைவன் ரணில் சமஷ்டியை தீர்வாக வைத்து ஜனாதிபதி தேர்தலில் கேட்ட்அப்போது மஹிந்தராஜபக்ஷ ஒற்றையாட்சியை முன்வைத்து தேர்தல் கேட்டார்.

அப்போது இரா.சம்பந்தன் தலைமையிலான 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலைப் பகிஷ்கரியுங்கள் என பிரசாரம் செய்து ரணிலின் சமஷ்டியைத் தோக்கடித்து மஹிந்தவின் ஒற்றையாட்சியை வெல்லவைத்து ஒற்றையாட்சியை நிலைநிறுத்தி தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்தனர்.

எனவே, அன்று ரணிலுக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால் சமஷ்டி வந்திருக்கும். ஆனால் இவ்வாறு சமஷ்டி வேண்டாம் என பிரசாரம் செய்த இரா. சம்பந்தன் மற்றும் தமிழ் தலைமைகள் தற்போது வடக்கு கிழக்கில் இந்து ஆலையங்கள் இடிப்பு, காணி அபகரிப்பில் ஜனாதிபதி செயற்பட்டுக் கொண்டு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப் பேச்சுக்கு வருமாறு அழைக்கின்றபோது முதலில் தமிழர்களின் காணி அபகரிப்பு, இந்து ஆலயங்கள் உடைப்பை நிறத்தினால் தான் பேச்சுக்கு நாங்கள் வருவோம் என சொல்ல தைரியம் இல்லாதவர்கள்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது 3 லச்சம் மக்கள் இறக்கும் போது மௌனிகளாக இருந்துவிட்டு – தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு – இன்று அரசாஜுங்கத்துடன் வெக்கமில்லாமல் சமஷ்டியைப் பற்றிப் பேசப் போகின் றனர் என்பது வேடிக்கையானது என்பதுடன் இப்படியான சூழ்நிலையில் இனி சமஷ்டி கிடைக்குமா? மக்களை ஏமாற்றினால் போதும் எனது அரசியல் செய்கின்றனர்.

பொருளாத நெருக்கடியால் பட்டினியால் மக்கள் சாகின்றனர் இவ்வாறு எரிகின்ற பிரச்சினையை எரியவிட்டுக் கொண்டு இருக்கின்றனர். ரணிலுக்கு நன்றாகத் தெரியும் தனது இப்போதைய ஆட்சி ஜனநாயக ஆட்சி, ஆட்சி அல்ல என்று.

இப்படி ஒரு நாட்டில் இப்படி ஓர் அரசியலா? இப்படியான துரோகமா? தமிழ் மக்களுக்குத் தமிழ் தலைமைகள் துரோகம் செய்தன என்றால் இந்த நாட்டில் ஏன் ஓர் அரசாங்கம். நாங்கள் அடிமைகளாகவே இருந்துவிட்டுப் போகலாம்.

இந்தத் தலைவர்களின் ஊழலைப் பற்றி அம்பலப்படுத்தாது விடுவதால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். இரா.சம்மந்தன் நாடாளுமன்றப் படி ஏற தகுதியில்லாதவர். ஏன் என்றால் சட்டப்படி உருவாக்கப்பட்ட நாடாளுமன்றம் அல்ல இது சட்டவல்லுநர்களுக்கு தெரியும் எல்லாரும் மௌனியாக இருக்கின்றமை நாட்டில் நடக்கின்றது ஒரு போலி கூத்து என்று.

நாங்கள் கடந்த காலத்தில் ஒரு சட்டத்துக்கு எதிராக அப்போதைய 18 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 6 வருடங்களாக நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்தோம் சம்பளம் கூட இல்லை. அவ்வாறே அதன் பின்னர் ஒரு சட்டத்துக்கு எதிராக 6 வருடம் பகிஷ்கரித்தோம். இன்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினராவது நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிதார்களா?

பேச்சுக்குமத்தியஸ்தம்செய்ய3வெளிநாடுகளைக் கூப்பிட்ட வேண்டும் என அறிக்கை விட்ட அடிமுட்டாள்கள் எங்கள் மக்களை ஏமாற்றாதீர்கள். நீங்கள் செய்த துரோகம் போதும்.

எந்த நாடும் இதை செய் என சொல்லமுடியாது என்பது சட்டத்தரணிகளான உங்களுக்குத் தெரியாதா? ஏன் மக்களை ஏமாற்றுகிறீர்கள். இந்தியாவில் இருந்து கப்பலில் பொருள்கள் வந்ததும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கு அருகில் நிற்கின்றனர். என்னவென்றால் நாங்கள் சொல்லிதான் இந்தியா சாமானுடன் வந்தது என சுரேஷ்பிரேமச்சந்திரன் உட்பட தமிழ்த் தலைமைகள் தமது வரலாற்றை பின்னோக்கிப் பார்க்கவேண்டும். அப்போது தான் தாங்கள் சொந்த மக்களுக்கு எவ்வளவு தூரம் ஏமாற்றி துரோகம் செய்துள்ளோம் எனத் தெரியும். இல்லை என ஒருவர் சொல்லட்டும் நான் பகிரங்கமாக மேடைக்குவரத் தயார் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கொலை செய்யப்பட்டுள்ள தினேஷ் ஷாப்டரின் கார் மயானத்திற்குள் பிரவேசித்த சி.சி.டி.வி. காணொளி!



மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட ஜனசக்தி காப்புறுதி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் கார், அவர் கொலை செய்யப்பட்ட அன்றைய தினம் பொரளை மயானத்துக்குள் செல்லும் காட்சி அந்த வீதியிலுள்ள சி.சி.டி.வி. கெமராவொன்றில் பதிவாகியுள்ளது.

அதற்கமைய குறித்த சி.சி.டி.வி. காணொளி பதிவுகளை அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தினேஷ் ாப்டரின் கொலை தொடர்பில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வரை சுமார் 23 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் பல கோணங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது, பல குழுக்கள் தொலைபேசி தொடர்புகளைப் பரிசோதிப்பதற்கும், சி.சி.டி.வி. காட்சிகளைக் கண்காணிப்பதற்கும் செயற்பட்டு வருகின்றன.

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டர் கடந்த வியாழக்கிழமை மாலை பொரளை மயானத்தில் காருக்குள் கைகளும் கழுத்தும் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார். பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் அன்றிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அவரது மரணம் தொடர்பாக நடத்தப்பட்ட பிரேதப் பரிசோதனையில், கழுத்து நெரிக்கப்பட்டதால் மரணம் நிகழ்ந்ததாக தெரியவந்தது. தினேஷ் ஷாப்டரின் உடல் கொழும்பு 07, பிளவர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, இறுதி கிரிகைகள் இடம்பெற்றன.

# மின்சாரம் தாக்கியதில் இரண்டு மாடுகள் சாவு

### வாழைச்சேனையில் சம்பவம்



வாழைச்சேனை – நாவலடி இன்னானியாவீதிதக்வாப்பள்ளிக்கு அருகில் மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழந்துள்ள சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் இருந்த மரம் ஒன்று பிரதான மின் கம்பம் ஒன்றில் முறிந்து விழுந்ததில் மின் கம்பி அறுந்துள்ளது.

இதனால், அந்தப் பகுதியில் மேய்ந்து திரிந்த மாடுகளில் இரண்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன. இச்சம்பவத்தில் அப்பகுதியால்சென்றநபரொருவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார் எனபிரதேசமக்கள்தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபையின் வாழைச்சேனை கிளைக்கு அறிவித்த போது சபை ஊழியர்கள் தாமதித்தே வருகை தந்தனர் என பிரதேச மக்கள் குறை கூறினர்.

# போதைப்பொருள் மாபியாக்களின் வலைக்குள் மாணவர்கள் சிக்கியமை வேதனையளிக்கிறது!

### இராதாகிருஷ்ணன் கவலை



போதைப்பொருள் கடத்தல், விநியோகம் மற்றும் பாவனையைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின்தலைவர்இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

பொகவந்தலாவ சர்வதேச சாலம் முன்பள்ளி பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

போதைப்பொருள் மாபியாக்களின் வலைக்குள் இன்று பாடசாலை மாணவர்களும் சிக்கி, போதைக்கு அடிமையாகிவருகின்றமை வேதனையளிக்கின்றது.

இதற்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளிவைக்க வேண்டும். பிள்ளைகள் தொடர்பில் பெற்றோர் விழிப்பாகவே இருக்க வேண்டும். ஆசிரியர்களும் கல்விக்கு அப்பால், மாணவர்களின் நலன்கள், ஒழுக்கம் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

திருமண வீடு, பிறந்தநாள் கொண்டாட்டம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பெற்றோர் சகிதம் பிள்ளைகளும் செல்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் பிள்ளைகளுக்கு பரீட்சாத்தமாக போதைப்பொருள் வழங்கப்படுகின்றது.

பின்னர் நிலைமை மோசமாகின்றது. எனவே, நிகழ்வுகளுக்கு பிள்ளைகளை அழைத்து செல்லும் பெற்றோர் அவர்கள்மீது கழுகுப்பார்வையை செலுத்தினால் நல்லது. நாட்டில் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது. பாதுகாப்பு பலமாக உள்ளது என பாதுகாப்பு தரப்பும் கூறுகின்றது. அப்படியானால் நாட்டுக்குள் போதைப்பொருள் வருவது எப்படி? மேலும் மைத்திரிபால சிறி சேனவின் ஆட்சிகாலத்தில் போதைப்பொருள்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே இலங்கையில் சமூக சீரழிவை ஏற்படுத்துவதற்கு சில நாடுகள் முற்படலாம். அவ்வாறான சூழ்ச்சிகளுக்குள் நாம் சிக்கி விடக்கூடாது. – எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# குறைந்து வருகின்றது கச்சா எண்ணெய் விலை!




கடந்த வாரத்தை விட உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை மேலும் இரண்டு சதவீதம் குறைந்துள்ளது.

அதன்படி, டபிள்யூ.டி.ஐ. ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 74.29 டொலராகவும், பிரண்ட் கச்சா எண்ணெய் பரல் 79.4 டொலராகவும் பதிவாகியுள்ளது.




# கடத்தப்பட்டதாக கூறி கணவனிடம் பணத்தைப் பெற முயற்சித்த பெண்

கணவன் மற்றும் பிள்ளைகளை ஏமாற்றி 35 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்த பெண்ணை புத்தளம் ஆனமடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தான் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் எனக் கூறி இந்த பெண், கணவன் மற்றும் பிள்ளைகளிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளார்.

கடத்திச் செல்லப்பட்டார் எனக் கூறி ஏமாற்றி பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த பெண் வேறு ஒரு வீட்டில் மறைந்து இருந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கடந்த 15 ஆம் திகதி 50 வயதான பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தாயான சந்தேக நபர் ஆனமடுவ நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வியட்நாமில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற மீன்பிடிக் கப்பல் சேதமடைந்து, தத்தளித்துக்கொண்டிருந்துள்ளது.

அதையடுத்து அவர்களை ஜப்பானிய கப்பல் அதிகாரிகள் மீட்டு வியட்நாமில் கரை சேர்த்தனர். அங்கு முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான முயற்சிகளை வியட்நாம் அதிகாரிகள் மேற்கொண்ட நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டு இலங்கையர்கள் தமது உயிரை மாய்க்க முயற்சித்திருந்தனர்.

அவர்கள் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், ஒருவர் ஆபத்தான கட்டத்தில் இருந்ததையடுத்து உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் கோரிக்கை விடுத்ததையடுத்து, நீண்ட நாட்களின் பின்னர் இலங்கைக்குக் கடந்த சனிக்கிழமை சடலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், சாவகச் சேரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று இறுதிக்கிரியைகள் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.12.2022 இல் வெளியிடப்பெற்றது.